செயற் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம்(ம)பராமரிப்பு, வட மாநில கோட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை:பொறிஞர்.சி.குழந்தையன், எம்.இ.,
செயற் பொறியாளர், பொ.ப.து.,

செயல்முறை ஆணை எண்.நிஎ1/2221/2023, நாள்:01.04.2025

பொருள்: பணியமைப்பு - பொ.ப.து- தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி – கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.ஆர்.முகம்மது ஃபையாஸ், இளநிலை உதவியாளர் - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. முதன்மைத் தலைமைப் பொறியாளர், மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்2(1) /017967/2023/நாள்.30.11.2023
2. தலைமைப் பொறியாளர், பொ.ப.து., சென்னை மண்டலம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண். நி2(1)/004786/2023 நாள்:18.12.2023
3. கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட பராமரிப்பு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.நி2/3600/2023 நாள்:26.12.2023
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். நிஎ1/1473/2023, நாள்:27.12.2023

*-*-*-*-*

பார்வையில் காணும் செயல்முறை ஆணைகளின் படி, திரு.ஆர்.முகம்மது ஃபையாஸ், இளநிலை உதவியாளர் அவர்கள் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக இக்கோட்ட அலுவலகத்தில் 27.12.2023 மு.ப முதல் பணிபுரிந்து வருகிறார்.

தனியரின் பணியினை வரன்முறை செய்யும் பொருட்டு பணிப்புத்தகம் ஆய்வு செய்யப்பட்டதில் இவர் பணியில் சேர்ந்த நாள் முதல் இதுநாள் வரை இவர் மீது குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில்லை, தண்டனைகள் ஏதும் வழங்கப்படவில்லை.

எனவே, தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணித்தொகுதி விதி 23(a)(1) இன் படி, இவர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 27.12.2023 மு.ப முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்கப்படுகிறது.

த.பி.பா

| வ. எண் | பெயர் (ம) பதவி | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை ~~கோரும்~~ செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு.ஆர்.முகம்மது ஃபைபாஸ் இளநிலை உதவியாளர். | 11.04.1993 | 27.12.2023 மு.ப | 27.12.2023 மு.ப |

மேலும், பணிவரன்முறை செய்து தகுதிகாண் பருவம் துவங்கிய நாளிலிருந்து மூன்றாண்டு தொடர் பணி காலத்திற்குள் இரண்டாண்டு பணிகாலத்தில் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், இந்த தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானி சாகர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலருக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-
செயற் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமானம்(ம) பராமரிப்பு,
வட மாநில கோட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5

பெறுநர்,

திரு.ஆர்.முகம்மது ஃபையாஸ், இளநிலை உதவியாளர்
வழி: செயற் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் (ம) பராமரிப்பு,
வட மாநில கோட்டம்,சேப்பாக்கம், சென்னை-5.

நகல்: முதன்மை தலைமைப் பொறியாளர், மற்றும் தலைமைப் பொறியாளர், (பொது) பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: தலைமைப் பொறியாளர், பொ.ப.து., சென்னை மண்டலம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்-1 சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னை–8.

நகல்: பட்டியலுக்கு

உபரி- 1

1/4/25

செயற் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமானம்(ம) பராமரிப்பு,
வட மாநில கோட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5

01/4/25